## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/ இரண்டாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்டம்பர்/ஒக்டோபர்2014)

## DTAS 4202 – Introduction to Selected Theatre Literature

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக

---

1. மதங்கசூளாமணியின் உறுப்பியலில் தொகுத்துக் கூறப்படும் நாடகம் ஒன்றிற்கான இலக்கணங்களையும் கூறுகளையும் சுருக்கமாக விபரிக்குக?

2. "ஷேக்ஸ்பியரை இந்திய நாடக மரபின் பின்புலத்தில் விளக்க எழுந்த முயற்சியின் விளைவே மதங்கசூளாமணி" இக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க?

3. "கதைப்போக்கின் வளர்ச்சியில் ஐந்து கார்ய நிலைகள் (அவஸ்தைகள்) ஐவகை அர்த்தப் பிரக்ருதிகளுடன் சந்தித்துப் பின் ஐவகை சந்திகளை தோற்றுவிக்கின்றன" நீர் கற்ற நாடக இலக்கியமொன்றின் ஊடாக இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை தெளிவுபடுத்துக?

4. "அகமாகிய பாவம் உள்ளத்தின் ரஸனையாய் நிறைவது சுவையாகும்: சுவைநிரம்பி மேலும் உடல்மூலம் வழிந்து உருவாதல் மெய்ப்பாடு ஆகும்" கூத்த நூல், நாட்டிய சாஸ்திரம், தொல்காப்பியம் முன்வைக்கும் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக?

5. "நாடக இலக்கண நூல்கள் யாவற்றிலும் நாடகச்செயல் நிகழ்வே அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது" நீர் பெற்றுள்ள நாடக இலக்கண அறிவுப் பின்புலத்தில் இக்கூற்றின் நியாயப்பாட்டை தெளிவுபடுத்துக?

6. கூத்த நூல் தமிழரின் ஆடல் மரபை எடுத்துக் கூறுகின்றது என்பதை விளக்குக?